அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 12/2012(I)

எனது இலக்கம் : EST-1/CIRL/03/0001
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2023.06.11

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் முன்வைக்கப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் அவற்றினை முன்வைக்க வேண்டிய விதம்

மேற்படி விடயம் தொடர்பாக 2012.09.17 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2012 இன் பால் தங்களது கவனத்தை ஈர்க்கிறேன்.

02. அச்சுற்றறிக்கையின் மூலம் தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் முன்வைக்கப்பட வேண்டிய விடயங்கள், முன்வைக்கக் கூடாத விடயங்கள் மற்றும் ஏதேனுமொரு பிரச்சினையை முன்வைப்பதாயின், முன்வைக்க வேண்டிய விதம் குறித்து அறியத்தரப்பட்டிருந்தும், அநேகமான சந்தர்ப்பங்களில் அதன் பால் கவனம் செலுத்தாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பின்வரும் சந்தர்ப்பங்களில் அவதானிக்கப்பட்டுள்ளதோடு, அவற்றில் சில பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

I. பிரச்சினையை உரிய வகையில் கண்டறியாமல், ஆய்வு செய்யாமல் அதனை தாபனப் பணிப்பாளர் நாயகத்திற்கு முன்வைத்தல்

II. தாபன விதிக்கோவையில் தெளிவாக ஏற்பாடுகளில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மீண்டும் மீண்டும் நிறுவனத்தினால் வினவுதல்

III. அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதியில் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பில் குறித்த அமைச்சு / திணைக்களம் அல்லது அமைச்சரவையினால் எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுக்க வேண்டிய கொள்கை ரீதியான முடிவுகளுக்கு உரித்தான ஆலோசனைகளை வினவுதல்

IV. முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்திடம் வினவப்பட வேண்டிய நியாயாதிக்க நிறுவனங்களுக்குரிய பிரச்சினைகள் தொடர்பில் விசாரித்தல்

V. அரசாங்க உத்தியோகத்தர்களினால் கடிதங்கள் மற்றும் மேன்முறையீடுகளை அனுப்பும் போது அரச உத்தியோகத்தர்களினால் பிரதிநிதித்துவங்கள் முன்வைக்கப்பட வேண்டிய முறையைக் குறிப்பிடும் தாபன விதிக்கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்காதிருக்கும் சந்தர்ப்பங்கள்

03. அவ்வாறே 2012.09.17 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 12/2012 இன் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்காததன் காரணமாக அவதானம் செலுத்தப்பட வேண்டிய அத்தியவசிய விடயங்கள் தொடர்பில் கழிக்க வேண்டிய காலம் வரையறுக்கப்படுவதோடு, தேவையற்ற விதத்தில் வளங்களின் வீண்விரயம் தாமதங்கள் ஏற்படுவதனால் குறித்த பிரச்சினைக்கு உள்ளாகியுள்ள அரச உத்தியோகத்தர்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கிறார்கள்.

04. எனவே, 2012.09.17 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 12/2012 இன் ஏற்பாடுகளின் பால் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கும் வகையில் தங்களுக்குக் கீழ் செயற்படுகின்ற நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிப்பது சிறந்தது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்களில் ஏற்படும் பிரச்சினை நிலைமை தொடர்பில் தாபன பணிப்பாளர் நாயகம் பொறுப்புக்கூற மாட்டார் என்பதனை வலியுறுத்துகிறேன்.


ஒப்பம்./ கே.டீ.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 0112662340
தொலைநகல் இலக்கம் : 0112692158
மின்னஞ்சல் முகவரி : ade-i@pubad.gov.lk